**நீதித்துறைநடுவர் நீதிமன்றம், எண். 1, சிதம்பரம்.**

**முன்னிலை: செல்வி.எம்.மாயாதேவி, பி.ஏ., எல்எல்.பி.,**

**நீதித்துறைநடுவர் எண்.1, சிதம்பரம்.**

**2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 26/2011**

**CNR.No.TNCD12-000031-2011**

**தமிழ்நாடு அரசுக்காக:**

காவல் உதவி ஆய்வாளர்,

சேத்தியாதோப்பு காவல் நிலையம்,

குற்ற எண். 252/2009 ..... குற்றமுறையீட்டாளர்

-எதிர்-

1. பிரபா என்கிற பிரபாகரன் த/பெ. தண்டபாணி

2. குணவதி க/பெ. மகேந்திரன் ...... எதிரிகள்

Order of the Hon'ble High Court of Madras in Roc.No.814/2020 /RG/F1 (P.Dis.No.36/2021) in Case Summary

| | | |
|---|---|---|
| 01. | The Period of remand of the accused | A1 – 30.09.2009 to 06.10.2009<br>A2 – Not remanded (AB) |
| 02. | The date of filing of the Complaint/Final Report of the Court | 02.12.2009 |
| 03. | The date of committal of the case to the Court Session | Not Applicable |
| 04. | The date of questioning of the accused under sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | 08.02.2011 |

| | | |
|---|---|---|
| 05. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions under Section 355 of the Code. | 1) Petition to recall Pw1 U/s. 348 BNSS., in CMP.No.696/2026 allowed on 08.07.2026.<br><br>2) Compromise Petition U/s. 359 BNSS in CMP.No.697/2026 dismissed on 08.07.2026.<br><br>3) To examine additional witness U/s. 348 BNSS., in CMP.No.739/2026 allowed on 13.07.2026. |
| 06. | Date of examination in-chief and cross-examination of a witness. | PW1 – 24.01.2019 (Chief & Cross)<br>PW2 – 01.07.2025 (Chief & Cross)<br>PW1 – 07.07.2026 (Cross)<br>PW3 – 13.07.2026 (Chief & Cross) |
| 07. | Date of examination of the accused under section 351 of the code; | 14.07.2026 |
| 08. | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and | Nil |
| 09. | grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கானது 21.01.2011-ந் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டும் அரசுத்தரப்பில் திருமதி.D.ஸ்ரீசங்கீதா அரசு உதவி வழக்கறிஞர் நிலை எண்.2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் திரு.என்.மகேந்திரன், வழக்குரைஞர் அவர்கள் ஆஜராகியும் நடத்திட, இறுதியாக இருதரப்பு வாதங்களையும் இன்று கேட்கப்பட்டும், வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் இன்று ஆராய்ந்து வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

கடந்த 29.09.2009-ந் தேதி இரவு சுமார் 2.30 மணிக்கு சென்னிநத்தம் தேவேந்திரன் என்பவர் வீட்டில், வாடகைக்கு குடியிருக்கும் அள்ளூர் மகேந்திரன்

என்பவர் தனது மனைவி குணவதியுடன் படுத்திருக்கும்போது எதிரி பிரபா (எ) பிரபாகரன் என்பவர் மகேந்திரன் வீட்டின் வராண்டாவில் வேறு ஒருவர் மனைவி என தெரிந்தும் மகேந்திரன் மனைவி குணவதியும் எதிரி பிரபாகரனும் ஒன்றாக கட்டிபிடித்துக்கொண்டு படுத்திருந்து குற்றம் புரிந்தும் தடுக்க சென்ற வாதி மகேந்திரனை எதிரிகள் தடுத்தும் 1வது எதிரி பிரபாகரன் என்பவர் கையை முறுக்கி மகேந்திரன் முதுகில் குத்தியும் 2வது எதிரி குணவதி என்பவர் தனது கணவர் மகேந்திரன் கழுத்தை பிடித்து நெறித்தும் எதிரிகள் இருவரும் சத்தம் போட்டால் கொலை செய்துவிடுவேன் என்று சொல்லி வாதி மகேந்திரனை மிரட்டியும் எதிரிகள் இருவரும் குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே, 1வது எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 341, 352, 497, 506(1)-ன் படியும், 2வது எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 341, 352, 506(1)-ன் படியும், குற்றஞ்சாட்டி சேத்தியாதோப்பு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) 1மற்றும் 2 எதிரிகள் இந்நீதிமன்றம் முன்னிலையானதும், எதிரிகளுக்கு கு.வி.மு.ச 207-ன் கீழாக வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டுள்ளது.

3) 1 மற்றும் 2 எதிரிகள் மீதான குற்றங்கள் பற்றி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளியில்லை என்று மறுத்துள்ளார்கள். 1வது எதிரியின்மீது இதச பிரிவுகள் 341, 352, 497, 506(1)-ன் படியாகவும், 2 வது எதிரியின்மீது இதச பிரிவுகள் 341, 352, 506(1)-ன் படியாகவும், குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளி இல்லை என்று மறுத்துள்ளார்கள்.

4) இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது எதிரிகளும் பாதிக்கப்பட்ட சாட்சியும் ஊர் பஞ்சாயத்தில் சேர்ந்து சமரசமாகிவிட்டதாக குறிப்பிட்டு இருதரப்பும் சேர்ந்து கையொப்பமிட்ட BNSS பிரிவு 359-ன் கீழான சமரசமனுவினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் கண்டுள்ள குற்றங்களானது சமரசத்திற்குரியதல்ல என்பதால் அம்மனு இந்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

5) அரசுத்தரப்பு சாட்சிகள் பட்டியலில் 1 முதல் 6 வரையிலானவர்களின் பெயர்கள் காண்பிக்கப்பட்டும், கூடுதல் சாட்சியாக உதவி ஆய்வாளர் முரளி என்பவர் சேர்க்கப்பட்டும், சாட்சி.2 செந்தில்குமார், சாட்சி.3 செல்லமுத்து, சாட்சி.5 மணிகண்டன், சாட்சி.6 சம்மந்தம்(சிறப்பு உதவி ஆய்வாளர்) ஆகிய நான்கு சாட்சிகளையும், அரசுத்தரப்பில் விலக்கி கொள்வதாக அரசுத்தரப்பு உதவி வழக்கறிஞர் சாட்சிகள் பட்டியலில் மேற்குறிப்பு செய்ததின் பேரில் விலக்கி கொள்ளப்பட்டும், எஞ்சிய சாட்சிகள் முறையே அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் விசாரிக்கப்பட்டும், **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான** சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் உள்ளன.

**6) அரசுத்தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரிய வரும் அரசுத்தரப்பு சாட்சியச் சுருக்கம்:**

(அ) அ.சா.1 மகேந்திரன் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். கடந்த 30.09.2009 அன்று காலை 9 மணிக்கு தான் என் மனைவியுடன் கிளாங்காடு போகும் சாலையில் வீடு வாடகை எடுத்து குடியிருந்ததாகவும், அப்போது தான் வேலைக்கு போய்விட்டு வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு தூங்கிவிட்டதாகவும், எதிரி குணவதி தன் மனைவி என்றும், விடியற்காலை தான் எழுந்து பார்த்தபோது எதிரிகள் இருவரும் தான் குடியிருந்த வீட்டின் ஹாலில் படுத்து இருந்ததாகவும், தான் சென்று தன் மனைவியை எழுப்பிய போது தன் மனைவி குணவதி தன் கழுத்தை பிடித்து நெறித்ததாகவும், எதிரி பிரபாகரனை தான் பிடித்தபோது தன் வலது கையை பிடித்து முறுக்கி தன் மீது ஏறி அமர்ந்துகொண்டதாகவும், கண்ணாடி ஓட்டை கிழித்து தன் வலது கையிலும், வலது தோள்போட்டையிலும் பிரபாகரன் குத்தியதாகவும், தான் இரண்டு எதிரிகளையும் உதறி தள்ளிவிட்டு வெளியில் ஓடிவந்து கத்தியதாகவும், அதற்குள் எதிரி பிரபாகரன் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், தான் இது சம்பந்தமாக சேத்தியாதோப்பு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததாகவும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும், புகாரில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையது தான் என்றும் கூறியுள்ளார்.

(ஆ) அ.சா.3 உதவி ஆய்வாளர் முரளி இவ்வழக்கின் விசாரணை அதிகாரிக்கு மாற்றாக சாட்சியமளித்துள்ளார். கடந்த 30.09.2009-ந் தேதி 2.30 மணிக்கு

சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பந்தம் சேத்தியாதோப்பு காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது ராஜேந்திரன் என்பவர் அளித்த அ.சா.ஆ.3 புகார் மனுவை பெற்று குற்ற எண்.252/2009 பிரிவுகள் 341, 352, 506(1), 497 இதச கீழ் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் உதவி ஆய்வாளர் சம்பந்தம் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தில்லை நடராஜன், மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.6 பார்வை மகசர் தயார் செய்துள்ளதாகவும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளதாகவும், 1வது எதிரியை 0.09.2009-ந் தேதி 15.00 மணிக்கு சேத்தியாதோப்பு ராஜீவ் காந்தி சிலை அருகே காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க வழிக்காவல் உடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், 2 வது எதிரி கடலூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் CRLMP.No.4549/2009 dated:07.10.2009-ந் தேதியிட்ட உத்தரவின் மூலம் முன்பிணை பெற்றுள்ளதாகவும், பின்பு விசாரணையை முடித்து வழக்கு சம்பவம் உண்மை என்று தெரியவந்த காரணத்தினால் எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 341, 352, 506(1), 497 கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

7) அரசுத்தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ)-படியாக எதிரிகளிடம் வினவிய போது எதிரிகள் அதனை மறுத்துள்ளார்கள். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

8) **தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவெனில், இவ்வழக்கில் 1வது எதிரியின்மீது இதச பிரிவுகள் 341, 352, 497, 506(1)-ன் படியாகவும், 2 வது எதிரியின்மீது இதச பிரிவுகள் 341, 352, 506(1)-ன் படியாகவும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரை

ஆகியவற்றின் மூலமும் எந்தவிதமான ஐயங்களுக்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டனவா? என்பதேயாகும்.

9) இவ்வழக்கில் கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் அரசுத்தரப்புக்கு ஆதரவாக எதிரிகள் மீதான எந்தவொரு குற்றச்சாட்டினையும் மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் அ.சா.3 உதவி ஆய்வாளர் மூலம் சம்பவம் குறித்து சாட்சியம் அளித்து சான்றாவணங்கள் குறியீடு செய்து உள்ளதால் எதிரிகள் மீதான குற்றங்கள் அரசுத்தரப்பில் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை அளிக்க வேண்டுமாய் வாதிட்டார்.

10) கற்றறிந்த எதிரிகள்தரப்பு வழக்குரைஞர் அரசுத்தரப்பு வாதத்தினை மறுத்தும் இவ்வழக்கில் சம்பவம் குறித்தும் புகார் அளித்தது குறித்தும் சாட்சியம் அளிக்கவேண்டிய அ.சா.1 முதல் விசாரணையிலிருந்து முரண்பட்டு குறுக்கு விசாரணையில் பிறழ் சாட்சியாகியுள்ளதாலும், அ.சா.2 அரசுத்தரப்பில் பகுதி பிறழ்சாட்சியாகியுள்ளதாலும், அ.சா.3 உதவி ஆய்வாளரின் சாட்சியம் சான்றாவணங்களை உறுதி செய்யும் வகையில் எந்தவிதத்திலும் எந்த சாட்சியமும் அமையாததால் எழும் ஐயத்தின் பலனை எதிரிகளுக்கே அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமாய் வாதிட்டார்.

**11) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

இரு தரப்பு வாதங்களும் சான்றாவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 மகேந்திரன் தனது சாட்சியத்தில், கடந்த 30.09.2009 அன்று காலை 9 மணிக்கு தான் என் மனைவியுடன் கிளாங்காடு போகும் சாலையில் வீடு வாடகை எடுத்து குடியிருந்ததாகவும், அப்போது தான் வேலைக்கு போய்விட்டு வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு தூங்கிவிட்டதாகவும், எதிரி குணவதி தன் மனைவி என்றும், விடியற்காலை தான் எழுந்து பார்த்தபோது எதிரிகள் இருவரும் தான் குடியிருந்த வீட்டின் ஹாலில் படுத்து இருந்ததாகவும், தான் சென்று தன் மனைவியை எழுப்பிய போது தன் மனைவி குணவதி தன் கழுத்தை பிடித்து நெறித்ததாகவும், எதிரி பிரபாகரனை தான் பிடித்தபோது தன்

வலது கையை பிடித்து முறுக்கி தன் மீது ஏறி அமர்ந்துகொண்டதாகவும், கண்ணாடி ஓட்டை கிழித்து தன் வலது கையிலும், வலது தோள்போட்டையிலும் பிரபாகரன் குத்தியதாகவும், தான் இரண்டு எதிரிகளையும் உதறி தள்ளிவிட்டு வெளியில் ஓடிவந்து கத்தியதாகவும், அதற்குள் எதிரி பிரபாகரன் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், தான் இது சம்பந்தமாக சேத்தியாதோப்பு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததாகவும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும், புகாரில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12) அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "*நான் இந்த நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியவற்றை போலீஸார் சொல்லிக் கொடுத்து சொன்னேன் என்றால் சரிதான்*" என்று கூறியுள்ளார். இவ்வாறு அ.சா.1-ன் சாட்சியம் முதல் விசாரணைக்கும் குறுக்கு விசாரணைக்கும் முரண்பட்டு இருப்பதால் நம்பகத்தன்மை அற்று இருப்பதாக கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது.

13) 1வது எதிரி முறை பிறழ்ந்த குற்றம் புரிந்ததாகவோ, முதுகில் குத்தியதாகவோ, 2வது எதிரி கழுத்தை நெறித்ததாகவோ, 1 மற்றும் 2 எதிரிகள் தடுத்ததாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, எந்தவொரு சாட்சியமும் எதிரிகள் மீது குறிப்பிட்டு அ.சா.1 கூறவில்லை என்பதால் அ.சா.1-ன் சாட்சியத்தை அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து அவரை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. எனவே, எதிரிகளின் மீதான எந்தவொரு குற்றச்சாட்டும் நிரூபணம் செய்யும் வகையில் அ.சா.1-ன் சாட்சியம் அமையவில்லை என்றே முடிவு காணப்படுகிறது.

14) பார்வை மகசர் சாட்சியான அ.சா.2 தில்லை நடராஜன் தனது சாட்சியத்தில், பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையொப்பத்தை இட்ட தேதி நினைவில்லை என்றும், 8 - 9 வருடங்களுக்கு முன்பு அந்த கையொப்பம் இட்டதாகவும், தங்கள் தெருவில் போலீஸார் வந்து இந்த வழக்கு சம்பந்தமாக

விசாரித்தார்கள் அப்போது போலீஸாரிடம் மேற்படி கையொப்பத்தை போட்டுக் கொடுத்ததாகவும், தாங்கள் அங்கு வந்ததற்காக சாட்சி கையொப்பம் கேட்டபோது போட்டுக் கொடுத்ததாகவும், போலீஸார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2-ன் சாட்சியத்தை அரசுத்தரப்பில் பகுதி பிறழ்சாட்சியாக பாவித்து அவரை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை.

15) அ.சா.3 உதவி ஆய்வாளர் முரளி இவ்வழக்கில் புலன்விசாரணை மேற்கொண்ட புலன்விசாரணை அதிகாரிக்கு மாற்றாக சாட்சியம் அளித்துள்ளார். இந்நீதிமன்றத்தில் அ.சா.3 உதவி ஆய்வாளர் முரளி அளித்த சாட்சியத்தில் தற்போது சேத்தியாதோப்பு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து மற்றும் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் சம்பந்தம் பணி மாறுதல் பெற்று வேறு பணியிடம் சென்றுவிட்ட நிலையில் மேற்படி காவல் உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு தெரியும் என்ற வகையிலும் வழக்கு கோப்பின் அடிப்படையில் அவருக்கு மாற்றாக சாட்சியம் அளிப்பதாகவும் கூறியுள்ளார்.

16) அ.சா.3 உதவி ஆய்வாளர் முரளி என்பவரின் நீதிமன்ற சாட்சியத்தைப் பரிசீலனை செய்கையில், வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது. தனிநபர் சாட்சிகள் அரசுத்தரப்பிற்கு வலுசேர்க்காத நிலையில் புலன்விசாரணை அலுவலருக்கு மாற்றாக சாட்சியம் அளித்த அ.சா.3-ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி குற்றம் புரிந்தார் என்று தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17) மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களை ஒருங்கிணைத்து பார்க்கும்போது, 1வது எதிரி முறை பிறழ்ந்த குற்றம் புரிந்ததாகவோ, முதுகில் குத்தியதாகவோ, 2 வது எதிரி கழுத்தை நெறித்ததாகவோ, 1 மற்றும் 2 எதிரிகள் தடுத்ததாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில்

அமையாததால் அ.சா.3 விசாரணை அதிகாரியின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் இவ்வழக்கு எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தகுதிநிலை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இவ்வழக்கில் மேற்கண்ட பிரச்சனைக்கு அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

18) முடிவாக, இவ்வழக்கில் 1வது எதிரியானவர் இதச பிரிவுகள் 341, 352, 497, 506(1)-ன் படியும், 2 வது எதிரியானவர் இதச பிரிவுகள் 341, 352, 506(1)-ன் படியும், குற்றவாளிகள் இல்லையென தீர்வு கண்டதால் 1 மற்றும் 2 எதிரிகளை BNSS பிரிவு 271(1)-ன் கீழாக விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. (எதிரிகள் மீதான பிணை முறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்திரவிடப்படுகிறது).

19) இவ்வழக்கில் உத்திரவிடுவதற்கான வழக்கு சொத்து எதுவுமில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து பார்த்து, பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAYADEVI M Digitally signed by MAYADEVI M Date: 2026.07.14 17:46:24 +0530

நீதித்துறைநடுவர் எண்.1,

சிதம்பரம்.

**1) அரசுத்தரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. மகேந்திரன். |
| அ.சா.2 | திரு. தில்லை நடராஜன். |
| அ.சா.3 | திரு. முரளி(உதவி ஆய்வாளர்). |

**2) அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ 1 | 30.09.2009 | புகார் மனுவிலுள்ள அ.சா.1-ன் கையொப்பம். |
| அ.சா.ஆ 2 | 30.09.2009 | பார்வை மகசரிலுள்ள அ.சா.2-ன் 1 வது சாட்சி கையொப்பம். |

அ.சா.ஆ 3 30.09.2009 அ.சா.1 அளித்த புகார் மனு.

அ.சா.ஆ 4 30.09.2009 முதல் தகவல் அறிக்கை.

அ.சா.ஆ 5 30.09.2009 மாதிரி வரைபடம்.

அ.சா.ஆ 6 30.09.2009 பார்வை மகசர்.

**3) <u>அரசுத்தரப்பு சான்றுப்பொருள்</u>:** இல்லை.

**<u>4) எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்று பொருள்.</u>** இல்லை.

MAYADEVI M
Digitally signed by MAYADEVI M
Date: 2026.07.14 17:46:34 +0530

நீதித்துறைநடுவர் எண்.1,

சிதம்பரம்.

**<u>குறிப்பு</u>:**

1) விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல்</u>:**

மாண்பமை கடலூர் மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.